

# சேவாலயா

சென்னையின் சாம்பியன் - சமுதாய முனைப்பு

# பேரார்வம். சேவை. திடம். புரட்சி. அதிகாரம் அளித்தல். தீவிரம். கனல்.



கிராமத்து மக்களின் படிப்பறிவையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தி வரும் 'சேவாலயா' என்னும் அமைப்பை கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக நடத்தி, 'சேவாலயா முரளி' என்று பலராலும் அழைக்கப்படும் வீ.முரளிதரன் அவர்களின் தகமைத் திரட்டை (Resume) மேற்குறிப்பிட்ட சொற்களில் அடக்கி விடலாம்.

அனாதைச் சிறுவர்களுக்காக நடத்தப்படும் அமைப்பாக 1988ஆம் வருடம் 'சேவாலயா' பதிவு செய்யப்பட்டது. எனினும், இதற்கான விதை, தனது 11ஆம் வயதிலே தான் படித்த ஒரு புத்தகமே காரணம் என்று ஒரு சுவாரசியமான கதையை விவரிக்கிறார் முரளிதரன். ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தபொழுது சக மாணவனின் வீட்டிற்கு ஒரு முறை சென்றார். அந்த மாணவனின் தந்தை ஒரு எழுத்தாளர். புத்தகங்களின் தொகுப்பு அடுக்கப்பட்டிருந்த புத்தக நிலைப்பெட்டியிலிருந்த ஒரு புத்தகத்திலிருந்து, இரு காந்தக் கண்கள் சிறுவன் முரளியைக் கவர்ந்து இழுத்தன. அந்தப் புத்தகத்தைப் படிக்க விரும்பிய சிறுவனிடம், இரவல் கொடுக்க முதலில் தயங்கினார் நண்பனின் தந்தை. இதற்கு இரண்டு காரணங்கள்- ஒன்று, சிறுவனின் வயதுக்கு முற்றிய புத்தகமாதலால், அவனால் அந்தப் புத்தகத்தில் கூறப்பட்ட விவரங்களைப் புரிந்து கொள்ள இயலாது; இரண்டு, அவரிடம் இரவல் வாங்கியவர்களில் சிலர் புத்தகங்களைத் திரும்பத் தராதது.

ஆயினும், சிறுவனின் ஆர்வத்தைப் புரிந்து கொண்டு, 24- மணி நேரத்திற்குள் புத்தகத்தைத் திரும்பித் தர வேண்டும் என்ற நிபந்தனையுடன், புத்தகத்தைக் கொடுத்தார் சக மாணவனின் தந்தை. 'சரஸ்வதி பூஜை' தினமான அன்று, வீட்டிலுள்ள அனைத்துப் புத்தகங்களையும் பூஜையில் வைத்த தனது தாத்தாவின் கண்பார்வையினின்றும் தப்பி ஒரு மூலைக்குச் சென்று, புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டிய பொழுது, ஒரே நாளில் இந்தப் புத்தகத்தைப் படிக்க இயலாது என்பது புரிந்து போனது. கவிதைத் தொகுப்பான அந்தப் புத்தகத்தில், தற்செயலாக ஒரு பக்கத்தைப் புரட்டினான் சிறுவன். சரஸ்வதியின் மீது அமைந்திருந்தது அந்தக் கவிதை, 'படிப்பறிவற்ற ஏழைகளுக்கு படிப்பறிவிப்பதே கல்வியின் உண்மையான குறிக்கோள்' - என்பதே அந்தக் கவிதையின் சாரம்.

"அந்த காந்தக் கண்களுக்குச் சொந்தக்காரர் மஹாகவி சுப்ரமணிய பாரதி. அந்தப் புத்தகம், அவரது கவிதைத் தொகுப்பு. நிச்சயமாக ஒரு நாள், நான் ஏழைச் சிறார்களுக்கு இலவசக் கல்வி அளிப்பேன், என்று அன்றைய தினம் என் மனதில் எண்ணம் தோன்றியது", என்கிறார் திரு.முரளி.
யதேச்சையாக நிகழ்ந்த நிகழ்வு என்றும் கூறலாம்; அல்லது விதி என்றும் கூறலாம். இன்னும் இரண்டு புத்தகங்கள், அவரது அந்த எண்ணத்தை வலுவாக்கியன. 1970களில், ராமகிருஷ்ண மடத்தில் 10 பைசாவிற்கு வாங்கிய 'ஏழைகளுக்கு உதவுவதே, முக்கியமான சேவை' என்பதை வலியுறுத்தும் விவேகானந்தரின் புத்தகம்; 'கிராமங்களை மேம்படுத்தி அடிமட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வரச் சொன்ன மஹாத்மா காந்தியின் 20-பக்க சிறு புத்தகம்.

"ஏழ்மையை ஒழிக்க வேண்டும் என்னும் எண்ணப்படிவு 15- வயதுச் சிறுவனாகிய என் மனத்தை நிரப்பியது", என்று கூறும் இன்றைய முரளியிடம் அன்றைய மன உறுதி இம்மியளவும் குறையவில்லை.

பள்ளியில் 20 மாணவர்கள் சேர்ந்து 'விவேகானந்தா அஸோசியேஷன்' என்னும் அமைப்பை உருவாக்கி, வாரயிறுதிகளில், அனாதை இல்லங்களுக்குச் சென்று, பலரிடமிருந்து வசூலித்த நன்கொடைகளை அளிப்பது, மூட்டை அரிசி வழங்குவது என தொண்டர்களாகப் பணி புரிந்தனர். அனாதைகளின் இன்னல் மிகுந்த வாழ்வினைக் காணக் காண, தான், நிறைய சம்பாதித்து, தனது கனவை நிறைவேற்ற வேண்டும் என்னும் அவா, இன்னும் அதிகமாகியது. எனவே, நன்கு படித்து ஒரு மென்பொருள் (software) அலுவலகத்தில் பணியில் அமர்ந்தார் திரு.முரளி.

தனது முதல் மாத ஊதியம் வாங்கியவுடன், வங்கியில் ப்ரத்தியேகமான ஒரு கணக்கைத் தொடங்கி, பிற்காலத்தில் தான் தொடங்க இருக்கும் நிலையத்திற்கான மூலதனத்திற்காக ஊதியத்தின் ஒரு சிறு பகுதியை அதில் சேர்த்து வந்தார். தன்னைப்போலவே குறிக்கோள்கள் நிறைந்த புவனேஷ்வரியை தனது பள்ளி நாட்களிலேயே சந்தித்த முரளி, அவரை, 1988ஆம் ஆண்டு மணந்து கொண்டார். அதே வருடம் மே மாதம் 29ஆம் நாள் சேவாலயா பதிவு செய்யப்பட்டது.

அன்றிலிருந்து, முரளி அவர்களின் சமூக சீர்திருத்தம் என்னும் பார்வையால் இயங்கி வரும் சேவாலயா, இலவசக் கல்வி, அனாதைச் சிறுவர்கள் மற்றும் கைவிடப்பட்ட முதியவர்களுக்கான அமைப்பு, கரிம வேளாண்மை (Organic farming) மற்றும் தரிசு நிர்வாகம் (Waste management) உள்ளடக்கிய சமுதாய முன்னேற்றம், என மூன்று முக்கிய அம்சங்களோடு செயல்படுகிறது. சூய சக்தியில் (Solar power) இயங்கும் வளாகத்தில் இரண்டு இலவச மருத்துவமனைகள் இருப்பது மட்டுமன்றி, கண் மற்றும் பல் சம்பந்தமான முகாம்களும் நடத்தப்படுகின்றன.

பள்ளிப் படிப்பைத் தொடர முடியாமல் போனவர்களுக்காக தொழில் சார்ந்த பயற்சி (Vocational training) அளிக்கும் சமூகக் கல்லூரி (Community College)யும் சேவாலயா வளாகத்தில் இருக்கிறது. நெறி தவரும் பதின்மவயதினரை (Delinquent juniors) திருவள்ளூர் குற்றவியல் நீதிபதி (Magistrate), மறுவாழ்விற்காக சேவாலயாவிற்கு அனுப்புவது குறிப்பிடத்தக்க ஒரு விஷயம். ஒவ்வொன்றிற்கும் ப்ரத்தியேகத் துறை நிறுவப்பட்டு கூட்டு நிறுவன









மாதிரியில் (Corporate model) செயல்படுகிறது சேவாலயா.

“எல்.கே.ஜி.யிலிருந்து இருக்கும் எங்களது பள்ளி, தமிழ் நாடு மாநில பாடத் திட்டத்தின் கீழ் வருகிறது. சுயமாக ‘நிறுவன வள திட்டம்’(ERP) இருக்கும் எங்களது நிறுவனத்தில், மடிக்கணினிகள் (Laptops), சூட்டிகைப் பலகைகள் (Smart boards) போன்றவற்றை இயக்கத் தெரிந்த ஆசிரியர்கள் இருக்கிறார்கள். முழு அடைப்பு (Lockdown) இருந்த கால கட்ட த்தில் சூம் (Zoom) மூலம் பாடங்களைப் படிப்பித்தார்கள்”, என்று கூறும் முரளி, “ஆங்கிலம் கற்பிக்கவும், 12ஆம் வகுப்பில் இருக்கும் மாணாக்கர்களை பொறியியல்/மருத்துவ நுழைவுத் தேர்வுகளுக்குத் தயார்படுத்தவும் பயிற்றாசிரியர்கள் தேவை” என்று தொடர்கிறார்.

பொதுமக்களாகிய நாம் எவ்வாறு உதவி செய்ய முடியும்?
இவர்கள் அளிக்கும் அனைத்து சேவைகளும் இலவசம். பெரும்பாலும் நிறுவங்களிலிருந்தும், தனிமனிதர்களிடமிருந்தும் வரும் நன் கொடைகள் மூலமே சேவாலயம் செயல்படுகிறது. நிதி, புத்தகங்கள் என எல்லாவித உதவிகளும் வரவேற்கப்படுகின்றன. என்.எஸ்.எஸ். அமைப்பின் மூலமாகவோ அல்லது சுயமாகவோ பள்ளி/கல்லூரி மாணவர்கள் தொண்டர்களாகப் பணி புரியலாம். உளவியல் (Psychology) மற்றும் சமூகவியல்(Sociology) படிக்கும் மாணவர்கள், சேவாலயாவில் திட்டச் செயல்களை (Project work) செய்கிறார்கள். மேலும், சேவாலயாவிற்கும், ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகம், சென்னை ஐ.ஐ.டி., அண்ணா பல்கலைக்கழகம் போன்ற பல கல்வி அமைக்களுக்கும் ஒப்பந்தம் இருக்கின்றது.

சேவாலயாவிற்கு வரும் சிறுவர்களின் உணர்ச்சித் தேவை என்ன?
இவரையும் இவரது மனைவியையும், சிறுவர்கள் தங்களது பெற்றோர்கள் போலப் பார்க்கிறார்கள். வயது முதிர்ந்தவர்களோ, இவர்களைத் தங்களுக்குப் பிறந்தவர்கள் போல் பார்க்கிறார்கள். சிலருக்கு, இவர்கள், இறுதிச் சடங்குகள் கூட செய்திருக்கிறார்கள்.

சமீபத்தில் கூடலூர் மையத்தில் நடந்த தையல் இயங்கி வழங்கும் நிகழ்வில், இல்வாழ்வில் முறைகேட்டால் (Domestic abuse) பாதிக்கப்பட்டிருந்த தனது மகளின் நடவடைக்கைகளை மிகவும் பொறுமையாகக்



கையாண்ட மையத் தலைவரை மிகுந்த நெகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் அப்பெண்ணின் தந்தை பாராட்டினார். மன அழுத்த த்தில் அவதிப்பட்ட அந்தப் பெண் தனது எதிர்காலத்தைக் குறித்த பல திட்டங்களை இப்பொழுது வைத்திருக்கிறார். இது போன்ற தருணங்கள், இவர்களை இன்னும் சிறப்பாகச் செயல்படுத்தும் தூண்டுகோலாக அமைகின்றன.

இங்கு படித்த பழைய மாணாக்கர்களும், ஒரு குழந்தையைத் தேர்ந்தெடுத்து உதவி செய்வது,வாரயிறுதிகளில் தொண்டர்களாகப் பணி புரிவது, ஒவ்வொரு வருடமும், ஜனவரி 26 மற்றும் ஆகஸ்ட் 15 ஆகிய தினங்களில் இரத்ததானம் செய்வது, என்று பல வகைகளிலும் உதவி செய்கின்றனர். ஏழு வயதில் சேவாலயத்திற்கு வந்த இளையராஜா என்னும் மாணவன், இப்பொழுது லண்டனில் காப் ஜெமினி (Capgemini) என்னும் நிறுவனத்தில் பெரிய பதவி வகுப்பதோடு மட்டுமல்லாமல், சேவாலயத்தின் அறக்காப்பாளர்களுள் (Trustee) ஒருவர், என்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு விஷயமாகும்.

இந்தப் பயணத்தில் சில சோதனைகளையும் இவர்கள் சந்தித்திருக்கிறார்கள். சேவாலயத்தைப் பற்றிய தவறான செய்திகள் 2007/2008 வருடங்களில் சில பத்திரிகைகளில் வெளியானது. அழுத்தம் மிகுந்த அந்த காலகட்டத்தில், பல திசைகளிலிருந்து உதவிகள் குவிந்தன. பல வருடங்களாக நன்கொடை அளித்து வரும் ஒருவர், இரட்டிப்புத் தொகையை வழங்கி இவர்களை நெகிழச் செய்தார்.

காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைக்கப்பட்ட முரளி அவர்களிடம், ஒரு அதிகாரி பேச ஆரம்பித்தார். அவரது சகோதரர் சேவாலயத்தில் படித்திருக்கிறார். தனது சகோதரரின் வாழ்வை எடுத்துக்காட்டாகக் கூறி, சிறுவர்களின் மீது நேர்த் திசை தாக்கம் அடைய வைக்கும் சேவாலயா பற்றி விசாரணைக் குழுவிடம் எடுத்துரைத்திருக்கிறார் அந்த காவல் அதிகாரி.

இறுதியில் அவர்கள் திரு.முரளையிடம் கேட்ட கேள்வி இது ஒன்றுதான்- “காஃபி அருந்துகிறீர்களா அல்லது தேநீரா?” சேவாலயாவின் எதிர்காலக் கனவுகளுள் ஒன்று , பல்கலைக்கழகம் தொடங்குவது. அங்கு பணி புரிபவர்கள், ஆதரவாளர்கள், தொண்டர்கள், நல விரும்பிகள் ,இவர்களுடன் சேவாலயாவின் பயணம் தொடர்கிறது - அடிமட்டத்தில் இருக்கும் மக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தை உண்டாக்கும் இனிய பயணம் அது.

சரயு ஸ்ரீராம்